ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி க. ஆங்கிரஸஸூ வைகாசிமீ பகுதி ரு.

Vol. 9. May & June 1932. No. 5.

"அரனதிகன்" என்ற பாட்டு.

இச்செய்யுள் கம்பராமாயணத்தின்கணுள்ளது. சுக்கிரீவன் பிராட்டியாரைத் தேடுவதற்குப் பல திசைகளிலும் வானரர்களை யனுப்பினான். தென்திசைக்கட் செலலுற்ற வானரர்களை நோக்கி, ஆங்குள்ள சிறந்த பலவிடங்களின் விவரங்கூறி வருகிறவிடத்தில் அருந்ததிமலையின் சிறப்பெடுத்துரைத்தனன். அம்மலையின் பெருமையினையே இச்செய்யுள் வெளியிடுகிறது. அது வருமாறு.—

"அரனதிகனுலகளந்தவரியதிகனென்றுரைக்குமறிவிலார்க்குப்
பரகதிசென்றடைவரியபரிசேபோற்புகலரியபண்பிற்றாமால்
சுரநதியினயலதுவான்றோய்குடுமிசுடர்த்தொகையதொழுவோர்க்கெல்லாம்
வரனதிகந்தருந்தகையவருந்ததியாநெடுவரையைவணங்கியப்பால்"

என்பதாம். இதற்குப் பலர் பலப்பல பொருள்கூறி இடர்ப்படுகின்றனராதலால், இதன் உண்மை இன்னதென்றாயவேண்டியதுங் கடமையாகும். முன்னர் அவருரைக்கும் பொருளை யாராய்வோம்.—

சிலர், அரனதிகன் - சிவபிரானே பரனாவான். அங்ஙனமிருக்க, உலகளந்த அரியதிகன் - திரிவிக்கிரமனாய் உலகினை யளந்த அரியே

பானுவான், என உரைக்கும் அறிவிலார்க்கு - என்று சொல்கின்ற அறிவற்ற மூடர்களுக்கு, பரகதி சென்று அடைவு அரிய பரிசே போல - நற்கதியைச் சென்று சேர்தல் அருமையான தன்மையுடைத்தாதல்போல, என்கின்றனர்.

வேறு சிலர், (அரியான் என்ற இவ்விருவரும் அறிவாற்றல் முதலியவற்றால் சமானமுடையவர்களாயிருக்க, இவ்வுண்மையை ஆராயாமல்) அரன் அதிகன் - சிவனேதான் சிறந்தவன், உலகு அளந்த அரியதிகன் - உலகினையளந்த அரியேதான உயர்ந்தவன், என உரைக்கும் அறிவிலார்க்கு - என்று செப்பும் அறிவற்ற மூழ மதிகளுக்கு, என்கின்றனர்.

ஒருசிலர், அரனதிகன்-சிவன்தான் சிறந்தவனோ? இல்லையோ?, உலகு அளந்த அரி அதிகன்-உலகினையளந்த விஷ்ணுதான் பரனோ? இல்லையோ?, என உரைக்கும் அறிவிலார்க்கு - என்று ஐயுற்றுரைக்கும் அறியா மூடர்களுக்கு. "சம்சயாத்மா விநச்யதி" யன்றோ! என்கின்றனர்.

இங்ஙனம் பலவாறாக இச்செய்யுட்குப் பொருள் கூறுகின்றனர். இனி, இதன் உண்மைப் பொருள் இன்னதென்று ஆராய்வோம்.— வாக்யபோதத்திற்கு * அநுபபத்தி கண்டவிடத்து † வக்த்ரு தாத்பர்யமறிந்து வாக்யார்த்த நிச்சயஞ் செய்யவேண்டுமென்பது நியமம். ஆதலால் ‡ சாப்தபோதத்தைக்குறித்து வக்த்ரு தாத்பர்யமும காரணமாகும். அதனால் முன்னர் வக்த்ரு தாத்பர்யத்தை நிர்ணயிப்போம்.—

கம்பர், காண்டங்கடோறும் கடவுள் வாழ்த்துக் கூறிவருகிற விடத்தில், "ஆதியந்தம் அரியென யாவையும், ஓதினர் அலகில்லன வுள்ளன, வேதமென்பன மெய்ந்நெறி நன்மையன், பாதமல்லது

---

* அநுபபத்தி—இயையாமை; யுக்தியின்மை; இடையூறு.

† வக்தரு தாத்பர்யம்—சொல்லிய புலவன் கருத்து.

‡ சாப்தபோதம்—ஒரு பதார்த்தத்தில் வேறு பதார்த்தத்தினை விஷயஞ் செய்யும் ஞானம். அஃதாவது—நீலகுடமென்னும் வாக்யஜன்ய ஞானம், குட பதார்த்ததில் நீலபதார்த்தத்தின் அபேதசம்பந்தத்தினைவிஷயஞ்செய்வதாம்.

பற்றிலர் பற்றிலார்" என்றும், "காலுங்கடலுங்கடந்திமையோ ரிடுக்கண்காத்த கழல்வேந்தை, வானின்றிழிந்து வரம்பிகந்தமாபூதத் தின் வைப்பெங்கும், ஊனுமுயிரு முணர்வும்போலுள்ளும்புறத்து முளனென்ப" என்றும், "சான்றுருவுணர்வினுக்கு உலகந்தா யினர்" என்றும், "இலங்கையிற் பொருதாரன்றே மறைகளுக் கிறுதியாவார்" என்றுங் கூறியுள்ளார். இந்த வாழ்த்துப்பாக்களில் அரியே பரதெய்வமென்றும், அவனே இராமபிரானாக வந்தவதரித் தனன் ; என்றும், அவனை யறிந்தவர்களே முற்றுமுணர்ந்தவரென் றும் விளக்கினாராதலால் அரியே பரம்பொருளாவானென்பது கம்ப ருடைய ஸித்தாந்தம்.

விராதன்வதைப்படலத்தில்,

" கடுத்தகராங்கதுவநிமிர்கையெடுத்துமெய்கலங்கி
உடுத்ததிசையனைத்தினுஞ்சென்றொலிகொள்ளவுறுதுயரால்
அடுத்தபெருந்தனிமூலத்தரும்பரமேபரமேயென்று
எடுத்தொருவாரணமழைப்பநீயோவன்றேனென்றாய் "

" பனிநின்றபெரும்பிறவிக்கடல்கடக்கும்படிபற்றி
நனிநின்றசமயத்தோரெல்லாருநன்றென்னத்
தனிநின்றதத்துவத்தின்றகைமூர்த்திநீயாகில்
இனிநின்றமுதற்றேவரென்கொண்டென்செய்வாரே "

" ஓயாதமலரயனேமுதலாகவுளராகி
மாயாதவானவர்க்குமற்றொழிந்தமன்னுயிர்க்கும்
நீயாகின்முதற்றாதைநெறிமுறையாலீன்றெடுத்த
தாயாவார்யாவரேதருமத்தின்றனிமூர்த்தி "

" பன்னலாமென்றுலகம்பலபலவுநினையுமால்
உன்னலாற்பெருந்தெய்வமுயர்ந்துளோரொழுக்கன்றே
அன்னவூர்தியைமுதலாமந்தணர்மாட்டருந்தெய்வம்
நின்னலாலில்லாமைநெறிநின்றார்நினையாரோ "

" அன்னமாயருமறைகளறைந்தாய்நீயவைபுன்னை
முன்னமாரோதுவித்தாரெல்லாருமுடிந்தாரோ
பின்னமாயொன்றுதல்பிரிந்தேயோபிரியாதோ
வென்னமாமாயமிவைவயேனமாய்மண்ணிடந்தாய் "

என்றும்,

சரபங்கர் பிறப்புநீங்கு படலத்தில்,

“ தோய்ந்தும்பொருளனைத்துந்தோயாதுநின்ற
சுடரேதொடக்கறுத்தோர்சுற்றமேபற்றி
நீந்தவரியநெடுங்கருணைக்கெல்லா
நிலையமேவேதநெறிமுறையினேடி
ஆய்ந்தவுணர்வினுணர்வேபகையால்
அலைப்புண்டடியேமடிபோற்றவந்தான்
ஈந்தவாமுதவவெய்தினையோவெந்தாய்
இருநிலத்தவோநின்னிணையடித்தாமரைதாம் ”

என்றும்,

கவந்தன் படலத்தில்,

“ மூலமேயில்லாமுதல்வனேநீமுயலும்
கோலமேயார்க்குந்தெரிவரியகொள்கைத்தால்
ஆலமோவாலினடையோவடைகிடந்த
பாலனோவாதிப்பரனோபகராயே ”

“ காண்பார்க்குங்காணப்படுபொருட்குங்கண்ணாகிப்
பூண்பாய்போல்நிற்றியால்யாதொன்றும்பூணாதாய்
மாண்பாலுலகைவயிற்றொளித்துவாங்குதியால்
ஆண்பாலோபெண்பாலோவப்பாலோவெப்பாலோ ”

“ ஆதிப்பிரமனுநீயாதிப்பரமனுநீ
ஓதியுறுபொருளுக்கப்பாலுண்டாயினுநீ
சோதிச்சுடர்ப்பிழம்புநீயென்றுசொல்லுகின்ற
வேதமுரைசெய்தால்வெள்காரோவேறுள்ளார் ”

என்றுமுரைத்தனர். இதனால் ஜகத்காரணனாய் விளங்குபவனும், அயன் முதலான தேவர்கட்குந் தலைவனாய்த் திகழ்பவனும், தனிப் பெருமுதலாய்த் தழைப்பவனும், எல்லா வுயிர்க்கும் எவ்வகையான உறவுமுடையவனாயிருந்து நன்மையை நாடுபவனும், உயர்ந்தோரால் ஆராயப்படுமவனும், எல்லாமறிந்தவனும், எல்லாம் வல்லவனும், எல்லாவுயிர்களுள்ளும் உள்ளும் புறம்புமாய் நிறைந்து விளங்குமவனும், அங்ஙனமிருந்தும் அவற்றின் தோஷஞ்சாராதிருப்பவனும், இச்சையால் அவதரிப்பவனும், அறிதற்கரிய மாயச்செயலுடையவனும், ஜ்யோதிஸ்வரூபனும், அகடிதகடனா சாமர்த்தியமுடையவ

னும், முழுமுதற் பொருளென்று வேதங்களாற் கொண்டாடப்படு பவனும் எவனோ ? அவனுக்கும் அரிரூபியாகிய பரம்பொருளென்று நிறுவினர்.

இங்கு விராதன் கூற்றையும், இந்திரனுரையையும், கவந்தன் மொழியையும் கம்பர் கருத்தாகக்கொள்ளலாமோ வென்னில்; இவர் காண்டங்கடோறுமுரைத்த கடவுள் வாழ்த்தின் கருத்தோடு, இவர்களுரையுங் கருத்தொற்றுமையா யிருப்பதாற் கொள்ளலா மென்க. இஃதல்லாமலும்,

" ஓமராமமரையொருங்குணர்வோருணர்வுறும்
சாமராமவரைநல்லறநிறுத்தஜனகித்
தாமராவணைதுறந்துதரைமின்றவரையோர்
மாமராமரமிறுத்ததுகொடெற்றவரலும் "

என்றபடி திருப்பாற்கடலைவிட்டுத் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக இராமபிரானாக வந்தவதரித்தவனே ஓங்காரமாகிய பிரணவப்பொருளாய் விளங்குபவனென்றுரைத்துள்ளார். இது கவிக்கூற்று. இத் தகைய கவிக்கூற்றும் பலவிடங்களிலுங் காணலாம்.

இத்துணையுங் கூறியவாற்றால் கம்பர் கருத்து இன்னதென்று தெளிவாயிற்றாதலால், இனி யிக்கருத்திற்கேற்ப " அரனதிகன் " என்ற செய்யுட்குப் பொருளாராய்வோம்.—

உலகு அளந்த அரி அதிகன் - உலகமனைத்தையும் தன் திருவடியால் அளவிட்ட அரியே பரனாவான். (அங்ஙனமிருக்க) அரன் அதிகன் - சிவன்தான் பரனாவான், என உரைக்கும் - என்று (இவ் விஷயத்தை ஆராய்ந்துணராமல்) கூறும், அறிவு இலோர்க்கு - உண்மை யறிவில்லாத மூடர்களுக்கு, பரகதி சென்று அடைவு அரிய பரிசேபோல - வீட்டுலகாகிய நல்ல கதியைச்சென்று சேர்வது அருமையான தன்மையாதல்போல, புகல் அரிய பண்பிற்று ஆம் - புகுவதற்கு அரிய தன்மையுள்ளதாகிய,- சுரநதியின் அயலது - தேவ கங்கையின் அருகிலுள்ளதும், வான்தோய் குடுமி சுடர் தொகையது- ஆகாயத்தை யளாவிய சிகரங்களிலே (சந்திர சூரியர்களாகிய) இரு கடரும் சேர்தலையுடையதும், தொழுதோர்க்கு எல்லாம் அதிகம்

வரன் தரும் தகையது-(தன்னை யன்புடன்) வணங்கினவர்கட்கெல்லாம் சிறந்த வரங்களைக் கொடுக்குந்தகைமையதுமான, அருந்ததியாம் நெடுமலையை - அருந்ததி யென்கிற தெய்வத்தன்மையுடைய பெரிய மலையை, வணங்கி - (நீங்கள் சென்று) தொழுது, அப்பால் - பிறகு, - (எ - று.)

"சிறப்பே நலனே காதல்வலியோடு, அந்நாற்பண்பு நிலைக்களமென்ப" என்ற சூத்திர விதிப்படி, சிறப்பு, நலன், காதல், வலி என்ற இந்நான்கினிலைக்களனாக உவமம் பிறக்கும். இவற்றுள் இச்செய்யுளிற்கூறிய உவமம் சிறப்பு நிலைக்களனாகப் பிறந்ததென்க. வீட்டுலகை உவமையாகக் கூறினாராதலான். பரகதியாகிய வீட்டுலகம் விரஜாநதியையுடையதாயிருப்பதுபோல, இதுவும் சுரநதியைத் தன்னகத்துக்கொண்டுளது. அவ்வுலகம் விமான கோபுரங்களில் தேஜோமயமான பல சிகரங்களையுடையதாயிருப்பதுபோல, இதுவும் வான்றோய் குடுமிச்சுடர்த் தொகையது. அவ்வுலகம் நித்திய முக்தர்கள் இச்சாநுகுணமாகப் போகம் நுகர்தற்குரியதாயிருப்பது போல, இதுவும் தன்னைத்தொழுதோர் விரும்பிய போகங்களை நுகர்தற்குச் சிறந்த வரங்களை யளிக்கும் பெற்றியது. இங்ஙனம் பரகதியாகிய தெளிவிசும்போடு இதுவும் ஒருவகையான் ஒற்றுமையுடையதாயிருப்பதால், இதற்கு இதனை யுவமையாகக் கூறினர்.

மேலும், "நருமதையுன்னுவீர்" என்றும், "ஏமகூடமொனு மலையெய்துவீர்" என்றும், "தண்டகஞ்சேர்திரால்" என்றும், "அறுமுகத்தொருவன் தனிக்கிடந்த சுவணத்தைச்சார்திர்மாதோ" என்றும், "குளிந்தமுஞ்சென்றுறுதிர்" என்றும் மற்றவிடங்களைச் சுட்டியுரைக்க வந்தகாலத்து, 'சேர்திர்' 'அடைதிர்' என்றுரைத்து, இந்த அருந்ததிமலையை மாத்திரம் வணங்கிச் செல்லுங்கள் என்றுரைத்ததினால் இது தெய்விகமுடையதென்பது விளங்கும். தேடிச் செல்லுங்காரியம் இடையூறின்றி இனிது முடியவேண்டுமென்று கருதி இதனை வணங்கிச் செல்லுங்களென்று கட்டளையிட்டனன் போலும். அவ்வுலகம் தத்துவஞானமுடையவர்களால் எய்தற்பாலதாயிருப்பதுபோல, இதுவும் தெளிந்த வறிவுடையவர்களால் எய்துந்திறத்ததென்பது தேற்றம்.

இங்கு, அறிவிலார் பரகதிசென்றடையாரென்று எதிர்மறை முகத்தாற் கூறியதனால அறிவுடையாரே அதனையடைவாரென்பது பெறப்படும். ஈண்டறிவுடையாரென்றது ப்ரஹ்ம ஜ்ஞானமுடையாரை. அறச்சிறந்ததாயிருப்பதே ப்ரஹ்மமாம். அதனை அரியதிகன் என்றதால் விளக்கினார். ஸர்வவியாபகனாயுள்ள வஸ்து எதுவோ, அதுவே அறச்சிறந்ததாகும். அதனை உலகளந்த என்ற விசேஷணத்தால் விளக்கினார். அரியின் திருமேனியின் ஏகதேசமாகிய திருவடியே எல்லா வுலகங்களையும் அடக்கியதென்றால் அவனது வியாபகஞ் சொல்லாமலே பெறப்படும். "வேதங்களறைகின்ற வுலகங்களெங்கும் விரித்தனவுன், பாதங்களிவையென்னிற் படிவங்களெப்படியோ" என்று இவர் கூறியதும் இதனை வலியுறுத்தும். மேலும், *அரியானவன் உலகினையளந்தான. அளந்த அவனது திருவடியைப் பிரமதேவன் திருவபிஷேகஞ் செய்தான். அந்தத் தீர்த்தத்தைச் சிவன் தான்பாவனமடைய சிரசாக வஹித்தான். இந்த மூவரில் சிறந்தவன் இன்னன் என்பதை ஆராய்ந்துகொள்வதற்காகவே இங்கு உலகளந்த விருத்தாந்தம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

சிவன் சாபவசப்பட்டுக் கையிற் கபாலமேந்தித் தான்புற்றுத் திரிந்தகாலத்தில் அரியே அக்கபாலம் நீங்கப் பிக்ஷையிட்டனன் என்ற இதிகாசத்தால் சிவன் பரதேவதையாகானென்பதை யாவருமறிவர். இதனை, இவரும் "மெய்யைத்தான் சிறிதுணர்ந்து நீ விரித்த மன்னுயிர்கள், உய்யத்தானாகாதோ வுனக்கென்ன குறையுண்டோ, வய்யத்தார் வானத்தார் மழுவாளிக்கன்றளித்த, அய்யத்தாற்சிறிதையந்தவிர்ந்தாருமுளரைய" என்றுரைத்ததால் நன்கறியலாம். இங்ஙனம் சிவனுக்கு இறைமைக்குணமில்லையென்பது வெள்ளிடைமலைபோலிருக்க, இதனையறியாதார் முழுமதிகளாவாரென்பார், அரனதிகனெனவுரைக்கு மறிவிலாரென்றார்.

* "குறைகொண்டுநான்முகன்குண்டிகைநீர்பெய்து
மறைகொண்டமந்திரத்தால்வாழ்த்திக்—கறைகொண்ட
கண்டத்தான்சென்னிமீதேறக்கழுவினான்
அண்டத்தான்சேவடியையாங்கு" (நான்முகன் திருவந்தாதி)

இங்கு, வீட்டிலகை உவமைகூறுமுகத்தான் அதனையடையும் அதிகாரிகள் இன்னவியல்பினரென்பதும், இறைமைக்குணமுடைய பரம்பொருள் இன்னதென்பதும், அஃதிலாத தெய்வமின்னதென பதும் விளக்கப்பட்டன.

இனி இச்செய்யுட்குச் சொற்கிடக்கையின்படியே வைத்து பொருளை யாராய்வோம்.—

அரனதிகன் - சிவனும் சிறந்தவனுவான், உலகளந்த அரி அதிகன் - எல்லா வுலகங்களையும் தன் திருவடியாலளந்த அரியும் பரனுவான், என உரைக்கும் அறிவிலார் - என்று (இவ்விருவரையும் சமமாக) உரைக்கு மூடர்களெனப் பொருள்கொள்ளினும் பொருந்தும். இறைமைக்குணமாகிய அதிகத்வ தர்மம் ஒரு வியக்தியிற் குடிகொண்டிருக்குமேயன்றி இரண்டுவியக்தியிற் குடிகொண்டிருக்க மாட்டாது. இங்ஙனமிருக்க அதிகத்வ தர்மத்தை இரண்டு வியக்தியிலும் ஏறிட்டுக்கூறுவது அறிவீனமாகும். "அஃதுடைப்பொருளின்கண் அது விசேஷணமாக வுணருமுணர்வன்றோ உண்மையுணர்வாம்" ரக்ஷ்யதவதர்மமுடைய அரனை அதிகத்வதர்மமுடையவனுகவறிவது பொய்யறிவாம். "இறைமைக்குணங்களிலாயினுரை உடையரெனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின்" என்று பரிமேலழகர் உரைத்ததும் இங்கறியத்தக்கது. அதிகத்வ தாமமுடைய அரியோடு அதிகத்வ தர்மமில்லாத அரனையும் சமமாக அறிவது பொய்யறிவாதலால் அறிவிலார் என்றார்.

இதனல், அரியே அதிகனுயிருக்க, அவனோடு அரனையும் அதிகனெனக்கருதும் விபரீத ஞானமும், அரனதிகனே? அரியதிகனே? என மதிக்கும் சம்சய ஞானமும், அரனும் அரியும் சமமாவரென்கிற சாம்யஞானமுமுடையவர்கள் பாகதியடைய மாட்டார்களென்று நிரூபிக்கலாயிற்று.

"பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும், மருளானு மாணுப்பிறப்பு" என்றும், "ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே, மெய்யுணர்வில்லாதவர்க்கு" என்றும், "கற்றீண்டு மெய்ப்

பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டு வாராநெறி" என்றுங் குறிப்பிடப்பெற்ற திருக்குறள்களால் விபரீத ஞானமும், ஐயவுணர்வும் பிறவிக்குக் காரணங்களாமென்றும், மெய்யுணர்வே வீடுபேற்றிற்கே துவாமென்றும் திருவள்ளுவர் உரைத்ததும் இதனை வலியுறுத்தும்.

இத்துணையும் ஆராய்ந்துரைத்த இப்பொருளே வக்த்ரு தாத்பர்யத்துக்கு இயைந்ததாம். இதனை ஆராயாமல், 'அரியும் சிவனும் ஒன்று; அன்று என்பவர் வாயில மண்ணு' என்று சாமானியமாக வழங்கும் வழக்கைக்கொண்டு இவ்விரண்டு தெய்வங்களும் ஒருவரேயாமென்பது பொருந்தாக்கூற்றென்பது அறியத்தக்கது.

ப. அ.

ஸ்ரீ:

நம்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவச் சிறப்பு.

[3-ம் திருநாள்—ஜீயர்புர வைபவம்.]

மிக்கார் வேதவிமலர் விழுங்கும் அக்காரக்கனியாகிய அரங்கேசன் பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டோடிவந்து, ஸத்யலோகத்திலும் அயோத்திமாநகரிலும் சிற்சிலகாலம் தங்கி, அவ்விரண்டிடங்களுமே தன் திருவுள்ளத்திற்கவ்வளவு பிடித்தமில்லாது, அடியார் குழாங்கள் குழுமியிருக்கும் ஆராமம் சூழ்ந்த அரங்கமே தனக்குகாத வாசஸ்தலமெனக்கருதினன். ஆற்றிடைக்கிடப்பதோர் அரவிந்தமலையோ என்னலாம்படி, பேர்க்கவும் பேராமல், "இருளிரியச்சுடர்மணிகளிமைக்கும் நெற்றி இனத்துத்தி அணிபணமாயிரங்களார்ந்த அரவரசப்பெருஞ்சோதி அனந்தனென்னும் அணிவிளங்குமுயர் வெள்ளை அணையைமேவி" "தென்னீர்ப்பொன்னித்திரைக்கையால் அடிவருட" மண்ணுலகில் மனிதருய்ய, அன்பொடு தென்திசை நோக்கிக் கள்ளநித்திரை செய்கின்றனன். தோலாத தனிவீரன் (இராமபிரான்) தொழுத தனிப்பெருஞ்சிறப்பால் இவ்வரங்கேசனுக்குப் "பெரியபெருமாள்" என்னும் பெயர் உலகப்பிரசித்தமாயினும், அன்னவனுக்குத் தமர்களிடும் பெயரில்

மிகவும் திருவுள்ளமாதலால் சோழராஜன் புத்ரியான ஒரு சிறு மடந்தையாலும், இருகண்களும் தெரியாத கிரம்பவும் வயதுசென்ற ஒரு வண்ணானாலும் முறையே யிடப்பட்ட "அழகியமணவாளன்" "நம்பெருமாள்" என்னும் இவ்விரண்டு திருநாமங்களையே தனக்கென்றும் கிடைத்தற்கரிய பெருந்தனமாகக்கருதினன். ஆதலால் அவ்விருபெயர்களுமே இப்பொழுது பெருவழக்காக வழங்கப்பட்டு வருகின்றன. நாகமேறி நடுக்கடலுள் துயிலும் நாராயணனும், அண்டர்கோனுமரங்கத்தம்மானுமாகிய அழகியமணவாளன் இங்ஙனம் ஸர்வஸுலபனாய் அரங்கமமர்ந்தனன். தொல்லருள் மண்ணும் விண்ணும் தொழநின்ற வித்திருவரங்கத்தில், நித்யவிபூதியில் தான் என்றும் கண்டறியாத உத்ஸவங்களையெல்லாம் கண்டருள்கின்ற மாட்சிமையால், மிகவும் பூரித்து இன்பம் பயக்க வெழில் மலர்மாதரும் தானும் இனிது வீற்றிருக்கின்றனன்.

திருவரங்கச் செல்வனாகிய அழகியமணவாளன் இங்ஙனம் நித்யோத்ஸவ ஸமாயுக்தனாய்க்கண்டருளும் ஏனைய பல உத்ஸவங்களிலும் சிறந்தது, பங்குனித்திங்களில் நடைபெறும் "பெரியதிருநாள்" என்னும் ஆதி ப்ரஹ்மோத்ஸவமே. இங்ஙனம் சிறப்புற்ற இவ்வுத்ஸவத்தில் நம்பெருமாள், தன்னடியாரளவில் தனக்குள்ள அன்பும், ஆதரவும், வாத்ஸல்யமும், ஸௌலப்யமும் தோற்ற நடக்கின்றனன் என்பதையே பலரும் பணிப்பர். இவ்வழகன் இவ்வுத்ஸவத்தில் இரண்டாம் திருநாளிரவு "ஜீயர்புரத்தேற" வெழுந்தருள்வதொன்றே இதற்குத்தக்க சான்றாகும்.

அகண்டகாவேரிக்கரையில், ஓர் அம்மையார், மறந்தும் புறந்தொழாமல், ஏகசிந்தையுடன், நாகணைமேற்சேரும் திருவரங்கச் செல்வனையே, நாளும் வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்து, கூடிக்கொள்ளும் காலமின்னம் குறுகாதோ வென்றேங்கியேங்கி, பரம ஆர்த்திதலையெடுக்கப்பெற்று வாழ்நாளைக் கழித்து வந்தனள். உள்ளுவாருள்ளிற்றெல்லாமுடனிருந்தறியும் தென்னரங்கத்தின்னமுதனும் இவள் நினைவை யறிவனன்றோ! அன்னவளுக்கருள்பாலிக்கத் திருவுள்ளங்கொண்டனன். இவ்வம்மையார் தினந்தோறும் அரங்கனென்னும் பெயருடைய தனது * செல்வக்குமரனை காலிகளின்

* பேரனென்னுஞ் சொல்வார்கள்.

(பசுக்களின்) பின்னனுப்பி மேய்த்துவரச் சொல்லிவிட்டு, பின்னர் அவனுக்குத் ததியன்னம் (தயிர்ச்சாதம்) செய்து, தான் சென்று கொடுத்து வருவது வழக்கம். பூமகள்கோனாகிய அழகியமணவாளனும், இதையே வ்யாஜமாகக்கொண்டு அவளை அங்கீகரிக்க முயன்றனன். ஒருநாளளவில் அந்தவம்மை, தன் மகனுக்குத் ததியன்னம் கொண்டு சென்று, "அரங்கா! அரங்கா!! வென்று அவன் பெயரையிட்டழைக்க, அவனும் எக்காரணம்பற்றியோ வாராதொழிந்தனன். அதனால் அவள் ஏங்கி யிளைத்தவமயம், மத்துறுகடைவெண்ணெயிலாசையுண்ட இவ்விதத்தனாகிய அரங்கேசன், அவ்வம்மை கையின் பரிசமுடைய ததியன்னத்திலாசையுற்று, அவள் குமரனைப்போல் வேடம் புனைந்து, ஓடோடியும் சென்று, அவள் முன்னின்று, அதை வாங்கி த்ருப்திகரமாகப் புஜித்து மறைந்தனன். மறுநிமிடமே, தன் குமாரனும் வந்து பசியால் களைத்து அன்னம் கேட்க, இவளும் "ஏனடா பிள்ளாய்! இப்பொழுதுதானே புஜித்துவிட்டு மறைந்தனை; மறுபடியும் வந்து என்னை ஏளனம் செய்கின்றனையோ", என்றனள். அவனும் "அம்மா! அடியேன் உண்மையில் பசியால் வருந்துகின்றேன்; இதற்குமுன் னெப்பொழுதாவதிப்படிச் செய்ததுண்டோ" வென்று களைத்துவிழ; அம்மையாரும், அன்னையாயத்தனையென்னையாண்டிடும் தன்மையனான, அழகிய மணவாளனே இங்ஙனம் செய்திருக்கவேண்டுமென வூஹித்து, அதிவிஸ்மயப்பட்டிருந்தனள்.

மறுநாளும் அவ்வண்ணமே காலிகள் பின் சென்ற தன் மகனுக்கு அம்மையார் ததியன்னம்கொண்டு சென்றழைக்க, சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையனாகிய நம்பெருமாளும் முன்னாள் போலவே சென்று அன்னத்தை யிரந்தனன். அக்கணமே, அம்மையரின் குமாரனாகிய வரங்கனும் அங்குவந்து, தன் அன்னையரின்முன் தன்போலவேயுள்ள ஒருருவைக்கண்டு "இதுவென்" என்று ப்ரமித்து நின்றனன். திருவரங்கச்செல்வனாகிய அழகியமணவாளனும் 'இனி இவர்களிடமிருந்து, நம் திருவுருவைக்காட்டினாலொழிய இலேசில் மீளவொண்ணா'தெனத் தீர்மானித்து, "திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும், வைத்தஞ்சலென்றகையும், கவித்த முடியும், முகமும் முறுவலும், ஆஸனபத்மத்திலே அழுந்தின திருவடி-

களுமாய்'', தன்னொப்பாரில்லப்பனாய் நின்று ஸேவை ஸாதித்து, அவர்களிருவரையும் தன் தாமரைக்கண்களால் குளிரநோக்கினன். அவ்வம்மையார், மானேய் நோக்கிமடவாளை மார்வில் கொண்ட மாதவனென்றிவனை யறிந்ததும், கோவைவாய் துடிப்ப மல்கு நீர்க் கண்ணொடு மையலுற்ற மனத்தினளாய் "அப்பனே, அடலாழி யானே, ஆழ்கடலைக்கடைந்த துப்பனே, அழகியமணவாளனே! உன் தோள்கள் நான்கும் கண்டுகளிக்க இப்பொழுதே வந்திட்டனையோ! வானிளவரசு வைகுந்தக்குட்டனாகிய நீயும், அடியாளையும் ஒரு பொருளென மதித்து இவ்வளவு தூரம் நடந்து வந்தனையோ; நடந்த கால்கள் நொந்தவோ'' வென்று எரிவாய் மெழுகொக்க நெஞ்சம் கரைந்துருகி, மூர்ச்சித்து நின்றனள். பின்னர் ஒருவாறு தேறி அப்பனுக்குப் பல்லாண்டு பாடி, "தாமரைக்கண்ணனோ, தனியேன் தனியாளாவோ, தாமரைக்கையாவோ, உன்னை என்று கொல் சேர்வதுவே? மதிள்திருவரங்கமுடையாய்! மாகவைகுந்தம் காண்பதற்கு என் மனம் ஏகவெண்ணும் இராப்பகலின்றியே; எய்தா நின்கழல் யானெய்த காலக்கழிவு செய்யேலே'' என்று பிரார்த்தித்தனள். அப்பொழுது அண்டர்கோன் அணியரங்கனும் "நீயும் உன் குமாரனும், இக்கணமே, மீட்சியின்றி வைகுந்தமாநகரம் புகுக்கோள்'' என்றனுக்கிரகித்தனன்.

தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்திவைத்த விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபகரும், உபயவிபூதிக்கும் நிர்வாஹகருமாகிய "உடையவர்'', நம்பெருமாள் அந்த அம்மையருக்கருளின்ற தன்மையை நெஞ்சுட்டேக்கி, நாளும் அழகியமணவாளனின் கரைபுரண்ட காருண்ய வெள்ளத்தை நினைந்து நினைந்து நெஞ்சுருகிக் கண்பனிப்ப நின்று, அங்கு மண்டபமும் கட்டுவித்து, ஆண்டிற் கொருமுறை அரங்கனை ஸகல விமரிசைகளுடனும் அங்கெழுந்தருளப்பண்ணி, "அம்மையார் தண்ணீர்ப்பந்தலில்'' வீற்றிருத்தி, அம்மையரிடம் அவனுகந்த ததியன்னமும், அரைக்கீரையமுதும் போக்யமாக அமுதுசெய்தருள்வித்து, அகில ஜனங்களுக்கும் அன்னவனின் ஸேவை கிடைக்கச் செய்து, மீண்டுமரங்கமேற எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போருவர். ஜீயராகிய உடையவர் செய்த விச்செயலின் ஞாபகார்த்தமாக அந்தவிடத்திற்கு "ஜீயர்புரம்''

என்னும் திருநாமமும் புனைவிக்கப்பட்டுளது. அழகியமண வாளனும், அவ்வெம்பெருமானாரின் நியமனம் மாறாதுகொண்டு, அந்நாள் தொடங்கி இந்நாள்வரை, பங்குனி மாசம் ப்ரஹ்மோத்ஸவத்தில் ஒருநாள் அங்கேறச்சென்று வருகின்றனன். எம்பெருமான் இவ்வண்ணம் சென்றுவரும் சீர்மையும், வழியிடையே ஆங்காங்குள்ள மேன்மக்கள் கதிரொளிதீபம் கலசமுடனேந்தி அன்னவனை எதிர்கொண்டு, பச்சிலைகீள் கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும் கட்டிய அழகியதோர் திருப்பந்தல்களில் வீற்றிருத்தி, தளிகை, பானகம், வடைப்பருப்பு முதலியவைகள் கண்டருளப்பண்ணி வழி நடந்தவவன் இளைப்பையாற்றுவதும், அவனும் அவர்கட்கு தீர்த்தம், சடகோபன் முதலியவை ப்ரஸாதிப்பதும், இன்னும் மற்றுமுள்ள அனேக வைபவங்களும் காணுந்திறத்தன. மேலும், இதன் வைபவத்தை நன்கு விளக்கத்தொடங்கினால் விரியுமென்றஞ்சி விடுத்தனன். அரங்கனின் ஸேவையிலாசைகொண்ட ஒவ்வொருவரும் இந்த உத்ஸவகாலத்தில் அழகியமணவாளனின் கூடவே சென்று இவ்வைபவங்களனைத்தையும் நேரிற் கண்டு மகிழ்ந்து, அவனுடைய கருணைக்கிலக்காவார்களாக. இப்பேரானந்தம், நேரிற் கண்டனுபவித்த பின்னரே நன்கு விளங்கும்.

இங்ஙனம், நம்பெருமாள் தான் ஆச்ரிதபாதந்த்ரன் என்பதையும், தனக்கவர்கள்பக்கல் வாத்ஸல்யம் எல்லைமீறிக் கிடக்குமென்பதையும் ப்ரத்யக்ஷமாகக் காண்பிப்பதுபோல், வெகு குதூகலத்துடனும், அதித்வரையுடனும் ஜீயர்புரம் எழுந்தருள்வதைஸேவித்து இன்புறுவதே அவனடியார்களுக்கு பெரும் வாழ்க்கையாகும். ஆதலில் அழகியமணவாளனும் யாதொரு விக்னமுமின்றி ஆண்டாண்டு தொறும் தவறாது ஜீயர்புரம் எழுந்தருளி வருவானாக; இராமானுசனின் திவ்யாக்ஞையும் நாளும் செழித்தோங்குக; அன்னவாடியார்களும் அரங்கனிணடிபணிந் தின்புற்றுய்வார்களாக.

தொடரும்.

By

S. RAMASWAMI IYENGAR, B.A.
462, East Chitra Street,
SRIRANGAM.

ஸ்ரீ:

மதிப்புரை.

வேதவேதாந்த வைஜயந்தீ :—இது, வைதிக வுலகத்திற்கோர் நல்விருந்தாகத்தோன்றிய சிறந்த மாதப்பத்திரிகை. உபயவேதாந்த ப்ரதிஷ்டாபநாசார்யரா யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமாந் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் ஸ்ரீ காஞ்சியில் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள 'வேதவேதாந்த வைஜயந்தீ' பாடசாலையின் மாணாக்கர்களின் நன்முயற்சியால் வெளிவருவது. இதற்கறிகுறியாகவே இப்பத்திரிகைக்குப் பாடசாலையின் பெயரே புனையப்பெற்றுளது. உபயவேதாந்த ப்ரதிஷ்டாபநாசார்யர் என்ற விருதுப்பெயரினை ஏனைய பலர் இடுகுறியளவாய் ஏற்றுக்கொண்டிருப்பதுபோலில்லாமல், ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யஸ்வாமி அப்பெயர் தமக்குக் காரணக்குறியாமாறு விளங்கும் கலாநிதியாவர். இப்பெரியார் தமிழ்வேத பாரங்கதரென்பதைச் "சேந்தமிழ்ச் செல்வர்" என்ற பட்டஞ் சூட்டப்பெற்றிருத்தலாலேயே நன்கறியலாம். இஃதல்லாமலும் திவ்யப்ரபந்தம் பலவற்றிற்கும் பேருரையாய்ந்து வெளியிட்டமையானுமுணரலாம். வடமொழி மறைக்கு வியாசபதம் செலுத்தும் வல்லுநரென்பதை அழுக்காறிலாத யாவருமறிவர். உபய வேதாந்தங்களை ஆராய்வதும், ஆராய்ந்தவற்றைப் புஸ்தகரூபமாய் வெளியிடுவதும், மாணாக்கர்கட்குப் போதிப்பதும் முதலிய வித்யா விஷயங்களிலே தம் வாழ்நாளைக் கழித்துவருகிறார். இவ்வுத்தமரைக் கலாநிலயம் என்று புகழ்வது மிகையாகாது. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளருள் இவரே முதன்மையாக எண்ணத்தக்கவராவர். இவ்வருங்கலைவிநோதரது வைதுஷ்யத்தின் பெருமை எம்மனோரால் புகழுந்திறத்ததன்று. இப்பெரியாரது அமிழ்தினுமினிய நயம்பயக்கும் நல்லுரைகள் புஸ்தகரூபமாய் விளங்கி உலகிற்கு என்றும் பயன்

படவேண்டுமென்றே மாணக்கர்கள் இப்பணியை மேற்கொண்டனர்போலும். இவர்களது நன்முயற்சி போற்றத்தக்கதே. இவர்களை இத்துறையில் ஊக்குவித்த பெரியாரது செயலும் பாராட்டத்தக்கதே.

இங்ஙனம் அறிவொழுக்கங்களிலும், சிஷ்ய ஸம்ருத்திகளிலும் குறைவற்றிலங்கும் இப்பெரியாரது சீர்மைகண்டு உகந்திருக்க வேண்டியது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பந்நர்களது கடமையாகும். எனினும், இக்காலத்தில் இவ்வுகப்புண்டாவது அருமையாயிருக்கும். " இப்படியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஏற்றமறிந்து உகந்திருக்கையும் " என்று லோகதேசிகன் அருளியதற்குப் பெரியஜீயர் கீழ்ச் சொல்லியவையெல்லா முண்டானலும் உண்டாக அரிதாயிருப்ப தொன்றிறேயிது '' என்று வியாக்கியானம் செய்தருளினர். இதனல் அழுக்காறு என்ற பிணி எவர்க்கும் பீடிக்குமென்பது விளங்கும். இங்ஙனம் பிறர் மினுக்கங்கண்டு பொருது அழுக்காறு கொண்டிருக்கும் இவ்வுலகத்தில் இப்பெரியார்பால் ஒரு சிலர் பொறுமைகொண்டுள்ளார்களென்பது வியப்பன்று. சென்ற சில காலத்திற்கு முன்னர் இப்பெரியார் இயற்றிய " வேதாத்யயந ஸர்வஸ்வம் " என்ற நூலிற்கு மறுபபாகத் திருக்குடத்தை அக்நிகோத்ரம் ஸ்ரீமாந் தாதாசார்யரென்பவர் "வேதலக்ஷண ஸித்தாஞ்சனம்" என்ற நூல் இயற்றியுள்ளார். இந்நூலிற் குறிப்பிடப்பெற்றுள்ள விஷயங்கள், ஸர்வஸ்வத்திற்கு மறுப்பாகமாட்டாவென்பது ஆய்ந்துணர்ந்த அறிஞர்களின் கொள்கை. இதனைப் புலப்படுத்துவதற்காகவே ப்ர. அண்ணங்கராசார்ய ஸ்வாமி " ஸர்வ ஸ்வரக்ஷா " என்று இயற்றியதை இந்த ஸ்வாமியின் சிஷ்யர்களுள் ஒருவரான ஸ்ரீமாந் தி. வி. சிங்கராசார்யர் என்பவர் தொகுத்து இப்பத்திரிகையில் வெளியிட்டுள்ளார்.

இப்பொழுது வெளியாயிருக்கிற பத்திரிகையில் 'பரிபக்தி பஞ்சபங்கி ' என்ற முழுமையும் ஸம்ஸ்க்ருத பாஷையாயுள்ள

வியாகரண விசாரக்ரந்தமும் 'ஸர்வ ஸ்வராக்ஷர' என்ற நூலின் விரிவான முகவுரையும் வெளியாயிருக்கின்றன. அஞ்சனக்காரர், 'ப்ரஜா:' என்று விஸர்க்காந்தமாகவே அத்யயனஞ்செய்யவேண்டுமேயன்றி, ப்ரஜா என்று ஆகாரந்தமாக அத்யயனஞ் செய்யலாகாதென்று ஓதினர். அதற்கு ரக்ஷையின் முகவுரையில் விஸர்க்காந்தமாகவும், ஆகாராந்தமாகவும் உச்சரிப்பதற்கு இடவேற்றுமையுண்டென்பதை விளக்கப் பல ஆகாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் ஈண்டெடுத்துரைப்பின் விரியும். இன்னும் நுண்ணிய பல வாராய்ச்சிகள் இதிற் பொதிந்துள்ளன. வைதிகர்கட்கும், ஸம்ஸ்க்ருத வித்யாசாலை மாணவர்கட்கும் இது பெரிதும் பயனளிக்கத்தக்கது. ஆதலால் இதனை எல்லாரும் ஆதரிக்குமாறு வேண்டுகின்றேன்.

வருஷச் சந்தா ரூ 1—8—0.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்க.

விலாசம் :—

"வேதவேதாந்த வைஜயந்தீ" ஆபீஸ்,
31, கீழண்ட மாட வீதி,
சின்ன காஞ்சீபுரம்.

ப. அ.